# முதல்சுவடு

## பாடல் வரிகள்

## Muthal Suvadu Lyrics

*This file is downloaded from*
**http://www.muthalsuvadu.8m.com**

*Compiled by*
**"Team Muthal Suvadu"**

This material is copyrighted. No part of this publication could be used in/on any projects or products without the prior written permission from *'e-panai Multimedia'*.

Title : Muthal Suvadu Lyrics
Subject : Audio album songs lyrics
Keywords : muthalsuvadu, muthal, mudal, suvadu, tamil, thamizh, songs, music, audio, album, sri lanka
Release Date : 30-03-2005

© 2004-2005 'e-panai Multimedia'.

# வாழ்க்கையில்

வாழ்க்கையில் ஒன்றாய் பயணிப்போம்
அதில் காண்பதற்கு பல இடமுண்டு
அதைக் கண்டு நாமும் பலனடைவோமே
இனி சண்டைகள் ஏன் சகோதரா?
அன்றுமுதல் இன்றுவரை
உருவம் மாறலாம்
நம் நட்பு மாறுமா
சொல் நண்பா...

நட்பில் உருவான நம் சொந்தம்
என்றும் தரும் நிலையான சொர்க்கம்
உப்பில்லா பண்டம் குப்பையிலே
நட்பில்லா வாழ்வு நரகமே!
நட்பை நீ என்றும் கொண்டாடு
கல்லு}ரி முடிந்தால் முடிவதில்லை
வாழ்வின் இறுதிவரை நீடித்தால் தான்
உண்மை நட்பென்று ஆகிடுமே...
ஒரு வெற்றி காண நீ போராடு
உன் கையில் உண்டு எதிர்காலமே
நாளைய தலைவன் நீ என்று
வா... வா... தோழனே முன்னேறு!

பாடல்வரிகள்,பாடியோர் : அருணன்,சிந்துஜன்
இசையமைப்பு : றீக்ஸ்

# Friends 4 Life

When we travel through life we'll see,
Life is like a deep blue sea.
Learn of many things & we'll be,
Brothers of one family.

We will see it everyday,
If we never turn away,
The future in our hands;
We the leaders of our land.

Standing by each others' side,
Filled with hope and filled with pride,
The journey of life has begun,
Till death we know that we'll be one.

Through our school life we were friends,
Never shall we part there'll be no ends,
To help a friend it is no sin,
Together we shall play and win.

Vocals & Lyrics : Arunan, Sindujan
Music : Reegz

# இயற்கையே

இயற்கையே உன்னைச் சரணடைந்தோம்
கொடிய மனத்தையும் தன்வயமாக்கும்,
இயற்கையே... இயற்கையே...
இயற்கையே உன்னைச் சரணடைந்தோமே...
மையல் கொண்ட மாது
மதி கண்டது போல,
கதிரவனைக்கண்டு
கமலம் விழிப்பது அழகு...
பட்டாம் பூச்சி ஒன்றின்
வண்ண இறக்கை போல,
வானமதை வெட்டிச்செல்லும் - அந்த
வானவில்லும் அழகு...
வானிலிருந்து வீழ்வதென்ன
முத்தோ முதல் பனியோ?
இதைக் கண்ட குழந்தையின்
சிரிப்பினில் தெரிவதென்ன,
இதைக் கண்ட குழந்தையின்
சிரிப்பிலும் உன்னழகு.
உன்னழகினில் இறைவனைக் கண்டோம்
உன்கொடைதனில் விடியலைக் கண்டோம்.

பாடியவர் : அருணன்
பாடல்வரிகள் : சுதஷினி
இசையமைப்பு : அருணன்

# யாரோ நீதான்

யாரோ நீதான் காதலா
கண்ணீரோடு தான் வாழ்க்கையா,
றோஜா மலரே கோபமா
முள்ளால் தைப்பது நியாயமா. யாரே...
பூவே பூவே எனைப்பாரடி
பூவும் முள்ளும் நீதானடி,
கண்ணே என்னைக் கண்பாரடி
காதல் வார்த்தை நீபேசடி.

கொஞ்சம் கொஞ்சமாய்
எனைக் கொல்வதேனடி,
எந்தன் மூச்சுக்காற்று நீதானடி.
உயிரே உயிரே எனை சேரடி
உன் வாசல் தேடும் என் காலடி,
காதலியே என் கனவில் நீயடி
கண்ணீரின் பிம்பம் நீதானடி.

காதல் கொண்டு அன்பே எனை
கொஞ்சம் ஆதரி,
என்றும் நீதானே எந்தன் காதலி.

பாடியோர்: Soofi, Hasbee
பாடல்வரிகள், இசையமைப்பு: Soofi, Shukri, Hasbee

# நம் நாடோ இலங்கை

நம் நாடோ இலங்கை,
அதிலேதும் குற்றமில்லையே,
தாய் தந்த சொத்தே
இந்து சமுத்திரத்தின் முத்தே.

இலங்கை ஒரு தீவு
அதில் ஏன் இன்னும் தேய்வு,
யுத்தமெனும் காயத்தை
மாற்ற சத்தம் போட்டு நீ பாடு.

*யாழ் மண்ணிலே பல இடமுண்டு*
*அதில் பனைகளுக்கு இல்லை தட்டுப்பாடு*
*வயல் உழுதிடும் வீர கரம் உண்டு*
*யாழ் பாடும் தமிழின் திருநாடு*

அந்நியனை நாட்டைவிட்டு விரட்டு
நம் பாணியில் ஆட்சி அமைத்து,
நமை எதிர்க்க தடையேதும் வந்தால்
சுட்டெரிக்க ஆயுதம் கையினில் தூக்கு.

*பௌத்தம், இந்து, இஸ்லாம், கிறிஸ்தவம்*
*பல இன மதங்களின் சங்கமம்*
*இது ஒன்றாய் வாழும் திருநாடு*
*இதற்கு சிவனொளிபாதம் கண்கூடு*

எந்த தீமைக்கும் அஞ்சவே மாட்டோம்
அழுக்குகளை அகற்றியே விடுவோம்,
அரசியலை வெண்மையாய் மாற்றி
தவறுகளை நாம் தட்டிக் கேட்போம்.

*மலைகளில் நதிகள் ஓடும் இசையில்*
*இன்னல்கள் தீர நனைந்திடலாம்*
*இலங்கையர் நாம் என உரத்துப்பாடி*
*வெளியிடுவோம் இது முதல் சுவடு*

வண்ணப்பறவை நம் தேசம் சுற்றிப் பறக்கும்
விரைவினில் அதில் வெண்புறா மிதக்கும்,
சமாதானத்தை நெஞ்சில் இட்டு வளர்த்து
சொர்க்க மி பெருமையை உலகுக்கு உணர்த்து

பாடியோர் : அருணன், சிந்துஜன்
பாடல்வரிகள், இசையமைப்பு : சிந்துஜன்

# ஜாதிகள் வேண்டாம்

வடக்கில் யுத்தம், தினமும் இரத்தம்,
போகும் வழியெலாம், குண்டுச் சத்தம்,
புதிய சமூகம், நாளைய உதயம்,
ஜதிகள் பேதங்கள், போகட்டும் தூரம்,
போரும் வாழ்வும், விதவைகள், முடவர்கள்,
கோயில்கள் பள்ளிகள், குழிகள் பிணங்கள்,
ஏன் இந்த அவலம், மக்களின் சலனம்,
வேண்டும் இனியொரு, சாந்தியின் ஜனனம்.

யுத்தங்கள் வேண்டாம் -செல்
சத்தங்கள் வேண்டாம்,
அமைதியாய் வாழ்ந்திடுவோம் -ஒரு
சுபீட்சமாய் மலர்ந்திடுவோம்.
போர்கள் அகதிகள்
இனியிங்கு வேண்டாம்,
விதவைகள் முடவர்கள்
இனியிங்கு வேண்டாம்,
அமைதியாய் வாழ்ந்திடுவோம் -ஒரு
புதுயுகம் படைத்திடுவோம்.

சமாதானம் தான் எங்கள் ஒரே மூச்சு,
அதுக்கேன் இவ்வளவு வீண் பேச்சு,
மலரட்டும் இனியொரு உதயமி,
உலகுக்கு நீ இதை எடுத்து காண்பி.
நீ ஒரு இஸ்லாம், நீ ஒரு கிறிஸ்தவன்,
நீ ஒரு பௌத்தன், நான் ஒரு இந்து,
இனங்கள் மதங்கள் ஏன் இந்தப்பிரிவினை,
மலரட்டும் இங்கே சாந்தியின் ஜனனம்.

ஜாதிகள் வேண்டாம்,
இனங்கள் வேண்டாம்,
பிரிவினை அழித்திடுவோம் -ஒரு
புதுயுகம் படைத்திடுவோம்.
பேதங்கள் பிரிவுகள்
இனியிங்கு வேண்டாம்,
ஒற்றுமையாய் மலர்ந்திடுவோம்,
உரிமையாய் வாழ்ந்திடுவோம்.

நாங்கள் பிறந்ததும் இந்த ஈழத்தில் தான் –அட
நீங்கள் பிறந்ததும் இந்த ஈழத்தில் தான்,
சமாதானமாய் இனி வாழ்வோம் நாம் –வாழ்வில்
முடிவில் செல்வது ஓரிடம் தான்.
உற்றுமைதான் எங்கள் ஒரே நோக்கம்,
ஜாதிகள் பேதங்கள் இனி வேண்டாம்,
வேற்றுமை விரசங்கள் இனி பாரோம்,
வேண்டும் இனியொரு சாந்தியின் ஜனனம்.

பாடல்வரிகள், இசையமைப்பு, பாடியவர் :
ரா. டிலுக்ஷன்

# சொல் சொல்

சொல் சொல் சொல்லன்பே
நீ யார் என்று எனக்கு
உன்னைக் கண்டால் தானே எந்தன்
கண்கள் இரண்டும் மலருமடி,
ஆனால் உன்னைக் காணாவிட்டால்
மீண்டும் கண்கள் வாடுமடி.

உன்னைக் காணும் நேரம் எல்லாம்
து}ங்கும் நேரம் மட்டும் தான்,
தப்பாய் ஏதும் எண்ணாதே - அது
எந்தன் கனவில் மட்டும் தான்.
என் கனவில் வந்ததும் நீ தானே
உன் பெயரைக் கேட்டேன் மறுத்தாயே
நான் கண்கள் மூடி து}ங்கும் போது
து}க்கம் தொலைத்து மறைந்தாயே...

காலைப் பனியில் உனைத் தொலைத்தேன்
கடும் குளிர் என்னை உறைத்ததடி,
நண்பகல் எல்லாம் தேடியே அலைந்தேன்
கதிரவன் என்னை எரித்ததடி.
இயற்கை நண்பர் எல்லாம் கூட
எனக்கு எதிராய் மாறிடவே
நாவில் உந்தன் நாமம் கூறி
வாழ்வில் பித்தன் நானாவேன்.

பாடியோர் : அருணன், சிந்துஜன்
பாடல்வரிகள், இசையமைப்பு : சிந்துஜன்

# பேராசை பெருநட்டம்

நான் சொல்லுறத கேளு அப்பு
இல்ல உனக்கு கிடைக்கும் நல்ல ஆப்பு
உனக்கு பிடிச்சிருக்கு ஒரு மப்பு
அதால் நீ செய்யிறதெல்லாம் தப்பு

பேராசை பெருநட்டம் தம்பி
நீ போகாதே பெண்களை நம்பி
பின்னர் பத்திக்கொண்டு எரியுமே கும்பி
அதால் நீ அழுவாய் வெம்பி வெம்பி

றோட்டு மேல போறான் ஒரு கேடி
அவன் வளக்கிறான் பிரஞ்சு தாடி
அவன் கையில இருக்கு வெள்ளை பீடி
அதால் ஆகப்போறான் சீக்கிரமா பாடி

தினந்தோறும் டப்பாங்கூத்து ஆடி
தெருவெல்லாம் கும்மாங்கூத்து பாடி
கடும் பசியினால் வாடும் லேடி
அவள் விக்கிறாளே திருட்டு சீ.டி.

லேடி கையில மாட்டிச்சு மந்திரசாடி
அதால் அவள் பெற்ற வரம் ஒருகோடி
லேடிமேல கண்ண வச்சான் கேடி
அவன் போகப் போறான் அவளேட ஓடி

கேடி சந்தித்தான் ஒரு சாது
அவர் காதலால் ஆகியிருந்தார் சேது
நான் சொல்லுறத கேக்கக்குடு காது
இல்ல கஷ்டப்படுவே நீ தோது

உன் நிறமோ அது கறுப்பு
அதால் அவளுக்கு உன்மேல் வெறுப்பு
இதில் உனக்கு ஏன் மறுப்பு
வேண்டும் நீ தங்க நிலையான இருப்பு

உல்டா புல்டாவை தினமும் செப்பு
இந்த லேகியத்தை நீ சப்பு
அதால் உன் வாயில் கொஞ்சம் கப்பு
பின்னால் அதிகம் போட்டுத்தின்னு உப்பு

காதல் அது சிக்கலல்ல வம்பு
உனக்கு லேகியத்தால் வரப்போகுது தெம்பு
நான் சொல்லுறத நீ நம்பு
பின்னர் எதிரிகள் உன்கையில் தும்பு

லேடிகிட்ட அனுப்பு நீ து}து
அவ முன்னால சிகரட்ட ஊது
இதால் மயங்குவாள் அந்த மாது
நான் சொல்லுறதில் என்றுமில்ல சூது

அந்த லேடியோ அவ பெரும் சூரி
நீ அவளுக்கு வாங்கிக்குடு சாரி
அது பிடிக்காம உன்ன மிதிச்சா ஏறி
என்ன மன்னிச்சிடு ஐ ஆம் வெரி சாரி

சாமி நான் போறேன் என் லேடி தேடி
அவகிட்ட இருக்கு மந்திரசாடி
அதால் அவள் பெற்ற வரம் ஒருகோடி
அதை பெற்றால் என் ஸ்டேற்றஸ் போயிரும்
-கூடி

நான் சொல்லுறத கேளு அப்பு
நீ சொல்லுறது எல்லாம் தப்பு
நல்லா போடுற எனக்கு சோப்பு
கடைசியில் எனக்கு கிடைக்கும் நல்ல ஆப்பு

கேடி சீதனமா கேட்டுப்புட்டான் கோடி
அத கேட்ட இடமோ மாடி...
கோபத்தாலே தள்ளிவிட்டா லேடி
கேடி ஆகிப்புட்டான் உடனே பாடி

பேராசை பெருநட்டம் தம்பி
நீ போகாதே பெண்களை நம்பி
பின்னர் பத்திக்கொண்டு எரியுமே கும்பி
அதால் நீ அழுவாய் வெம்பி வெம்பி

(தொப்பி சரியா இருக்கிறவங்க மட்டும்
போட்டுக்கலாம். மத்தப்படி யார் மனசயும்
புண்படுத்துற எண்ணம் எங்களுக்கு இல்லே...)

பாடியோர் : அருணன், சிந்துஜன்
பாடல்வரிகள், இசையமைப்பு : அருணன்

---

*Please forward your comments to us*
muthalsuvadu@yahoo.com

**http://www.muthalsuvadu.8m.com**